டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.10.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 097 | Madurai | Online Edition

# தமிழகத்தில் அக்.15ல் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக்13

வரும் 15-ம் தேதி தமிழகத்தில் கன்னியாகுமரி, மதுரை, கோவை, நீலகிரி, திருச்சி உள்பட 17 மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், தெற்கு இலங்கை கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதுதவிர, தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியில் இருந்து மத்திய வங்கக்கடல் பகுதிகள் வரை ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று (அக்.14) ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, புதுக்கோட்டை, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, விருதுநகர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர் ஆகிய 21 மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அக்.15-ம் தேதி தென்காசி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் மலைப் பகுதிகள், கன்னியாகுமரி, மதுரை, திண்டுக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, சேலம், நாமக்கல்,

கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, நாகை ஆகிய 17 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக் கூடும்.

அக்.16-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், திருச்சி, நாமக்கல், கரூர், அரியலூர், பெரம்பலூர், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 19 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

அக்.17-ம் தேதி திண்டுக்கல், திருச்சி, நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர் ஆகிய 13 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

அக்.18-ம் தேதி திருவண்ணாமலை, புதுக்கோட்டை, கள்ளக்குறிச்சி, திண்டுக்கல், மதுரை, நீலகிரி, கோவை, ஈரோடு, நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர், நாகை, தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய 16 மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யக் கூடும்.

அக்.19-ம் தேதி திண்டுக்கல், திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, ஈரோடு, திருப்பத்தூர், நாமக்கல், சேலம், கோவை, நீலகிரி, தஞ்சாவூர் ஆகிய 18 மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

அக்.15, முதல் 18 வரையிலான நாட்களில் ஏனைய தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று (அக்.14) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# உழவர் நல சேவை மையம் அமைப்பதற்கு அழைப்பு!

விருதுநகர், அக்.13

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கு.முத்தையா வெளியிட்டுள்ள அறிக்கையில், சாத்தூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் உழவர் நல சேவை மையம் அமைப்பதற்கு வேளாண்மை/தோட்டக் கலை/ வேளாண்மை பொறியியல் படிப்புகளில் பட்டம் மற்றும் பட்டயம் படித்தவர்களுக்கு 3 முதல் 6 லட்சம் வரை இடுபொருள் விற்பனை மையம் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்தல் மற்றும் பண்ணை இயந்திரம் வாடகை மையம் அமைப்பதற்கு மானியமாக வழங்கப்படுகிறது.

வேளாண்மை / தோட்டக்கலை / வேளாண்மை பொறியியல் படிப்புகளில் பட்டம் மற்றும் பட்டயம் முடித்தவர்கள் சாத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தினை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புக்கு : கு.முத்தையா, வேளாண்மை உதவி இயக்குநர் – 99945 29073, க.இந்து, வேளாண்மை அலுவலர் – 63836 45535, ஆ.சுந்தரராஜ், துணை வேளாண்மை அலுவலர் – 94434 87351.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# உயிரியல் நுண்ணறிவுடன் ஸ்மார்ட் வேளாண்மை : சந்தை விலையையும் முன்கூட்டியே கணிக்கும் செயற்கை நுண்ணறிவு

விவசாயத்தில் உற்பத்தியை அதிகரிப்பதுடன், நீர், உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கச் செய்யும் வகையில் செயற்கை நுண்ணறிவு (AI), உயிரியல் நுண்ணறிவு மற்றும் ஸ்மார்ட் வேளாண்மை தொழில்நுட்பங்கள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

தாவரங்கள், பூச்சிகள், விலங்குகள் உள்ளிட்ட உயிரினங்கள் தங்களின் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுகின்றன.

இயற்கையில் காணப்படும் இந்த நுண்ணறிவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் தொழில்நுட்பங்கள், தற்போது செயற்கை நுண்ணறிவு, IoT சென்சார்கள், ட்ரோன்கள், ரோபோட்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டு விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

**நோய்களை முன்கூட்டியே கண்டறியும் AI**

பயிர்களின் இலைகள் மற்றும் தாவரங்களின் படங்களை கேமராக்கள் மூலம் பதிவு செய்து, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் உதவியுடன் நோய் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய முடியும். இதன் மூலம் நோய் பரவுவதற்கு முன்பே தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**நீரைச் சேமிக்கும் ஸ்மார்ட் பாசனம்**

மண்ணின் ஈரப்பதத்தை அளவிடும் சென்சார்கள், வெப்ப நிலை மற்றும் வானிலைத் தரவுகளுடன் இணைக்கப்பட்டு செயல்படுகின்றன. பயிருக்கு எவ்வளவு நீர் தேவை என்பதை AI அமைப்பு கணித்து, அதற்கேற்ப தானியங்கி நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள முடியும். இதனால் நீர் வீணாவது குறைக்கப்பட்டு, நீரின் பயன்பாட்டுத் திறன்அதிகரிக்கிறது.

### பூச்சிக்கட்டுப்பாட்டிலும் தொழில்நுட்பம்

பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் சென்சார்கள் மற்றும் கேமராக்கள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளை மட்டும் கண்டறிந்து சிகிச்சை அளிக்க முடியும். இதன் மூலம் தேவை யற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டைக் குறைத்து, விவசாயச் செலவையும் சுற்றுச்சூழல் பாதிப்பையும் கட்டுப்படுத்தலாம்.

### சந்தை விலையை முன்கூட்டியே அறிய உதவும் AI

விவசாயிகளுக்கு மிக முக்கியமான சவால்களில் ஒன்று எப்போது விற்பனை செய்தால் அதிக விலை கிடைக்கும்? என்பதாகும். இந்தப் பிரச்சினைக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உதவக்கூடும். கடந்த காலசந்தை விலைகள், தற்போதைய சந்தை வரத்து, பயிரின் தேவை, பருவநிலை, வானிலை, உற்பத்தி அளவு மற்றும் பல்வேறு சந்தைகளின் விலை நிலவரம் போன்ற மிகப்பெரிய அளவிலான தரவுகளை AI பகுப்பாய்வு செய்ய முடியும். இதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பயிரின் விலை உயர வாய்ப்புள்ளதா, குறைய வாய்ப்புள்ளதா அல்லது நிலையாக இருக்குமா என்பதற்கான சாத்தியமான சந்தைப் போக்கை முன்கூட்டியே கணிக்க முடியும். உதாரண மாக, ஒரு விவசாயி தக்காளி சாகுபடி செய்திருந்தால், AI அமைப்பு கடந்த கால விலைத்தரவு, தற்போதைய வரத்து, தேவை மற்றும் வானிலை உள்ளிட்ட தகவல்களை ஆய்வு செய்து, அடுத்த சில வாரங்களில் விலை உயரக்கூடிய வாய்ப்பு உள்ளதா என்பதைத் தெரிவிக்க முடியும்.

**இதன் அடிப்படையில் விவசாயி** : எப்போது அறுவடை செய்வது? எந்த சந்தையில் விற்பது? உடனடியாக விற்பதா அல்லது சில நாட்கள் சேமித்து வைப்பதா? என்பது போன்ற முடிவுகளை தரவு அடிப்படையில் எடுக்க முடியும்.

### எதிர்கால சந்தை வாய்ப்புகளை அறிய புதிய வாய்ப்பு

எதிர்காலத்தில் AI விவசாய சந்தை ஆலோசகர் போன்ற அமைப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. விவசாயி தனது பயிர், சாகுபடி பரப்பளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் அறுவடை காலம் போன்ற தகவல்களை பதிவு செய்தால், புணூ அமைப்பு பல்வேறு சந்தைத் தரவுகளை ஆய்வு செய்து சாத்தியமான விலைப் போக்கையும் சந்தை வாய்ப்பு களையும் தெரிவிக்க முடியும்.

மேலும், அருகிலுள்ள சந்தைகள் மட்டுமின்றி பிற மாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் ஏற்றுமதி சந்தைகளிலும் எந்தப் பயிருக்கு எதிர்காலத்தில் தேவை அதிகரிக்கக்கூடும் என்பதைக் கண்டறிய உதவும் தொழில்நுட்பமாக இது உருவெடுக்கலாம். இதன் மூலம் விளைந்த பிறகு விலை என்ன? என்ற நிலைமையிலிருந்து, எந்தப் பயிரை எப்போது சாகுபடி செய்தால் சந்தை வாய்ப்பு அதிகம்? என்ற முன்கூட்டிய திட்டமிடலுக்கு விவசாயம் நகர முடியும்.

**இயற்கையிடமிருந்து கற்றுக்கொள்ளும் AI**

எறும்புகள், தேனீக்கள் போன்ற உயிரினங்கள் கூட்டமாகச் செயல்பட்டு சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முறையை அடிப்படையாகக் கொண்ட கூட்ட நுண்ணறிவு (Swarm Intelligence) தொழில்நுட்பமும் விவசாயத்தில் பயன் படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. பயிர் திட்டமிடல், நீர் மற்றும் உரத்தைச் சரியான முறையில் பகிர்ந் தளித்தல், விவசாயப் பணிகளை மேம்படுத்துதல் போன்ற வற்றில் இந்த அணுகுமுறை எதிர்காலத்தில் பயன்படக்கூடும்.

**ட்ரோன்கள், ரோபோக்கள் மூலம் தானியங்கி விவசாயம்**

விவசாய நிலங்களை கண்காணித்தல், பயிர்களின் வளர்ச்சியை மதிப்பிடுதல், உரம் மற்றும் மருந்து தெளித்தல் போன்ற பணிகளில் ட்ரோன்கள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் களையெடுத்தல், அறுவடை உள்ளிட்ட பணிகளிலும் தானியங்கி ரோபோக்களின் பயன்பாடு அதிகரிக்கக்கூடும்.

**விவசாயியின் முடிவெடுப்புக்கு துணை**

AI தொழில்நுட்பம் எதிர்கால சந்தை விலையை 100 சதவீதம் உறுதியாகக் கணிக்காது. எதிர்பாராத வானிலை, திடீர் உற்பத்தி மாற்றம், சந்தை வரத்து, அரசு கொள்கை மாற்றம், ஏற்றுமதி அல்லது இறக்குமதி கட்டுப்பாடுகள் போன்றவை விலையை மாற்றக்கூடும். எனவே, AI வழங்கும் தகவலை உறுதியான விலை அறிவிப்பாகக் கருதாமல், விவசாயியின் முடிவெடுப்புக்கு உதவும் தரவு அடிப்படையிலான ஆலோசனையாக பயன் படுத்துவது முக்கியம். உயிரியல் நுண்ணறிவு, செயற்கை நுண்ணறிவு மற்றும் IoT தொழில்நுட்பங்களை ஒருங் கிணைப்பதன் மூலம் குறைந்த வளங்களைப் பயன்படுத்தி அதிக

உற்பத்தி மற்றும் அதிக வருவாய் பெறும் நிலையான ஸ்மார்ட் வேளாண்மை உருவாகும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக நீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் சந்தை விலை ஏற்ற இறக்கம் போன்ற சவால்களை எதிர் கொள்ள, விதைப்பதற்கு முன்பே சந்தையை அறிந்து செயல்படும் விவசாயம் என்ற புதிய அணுகுமுறைக்கு செயற்கை நுண்ணறிவு முக்கிய அடித்தளமாக அமையக்கூடும்.

தகவல் : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்.***



# சம்பா பருவத்திற்கு ஏற்ற பாரம்பரிய நெல் இரகங்கள்



சம்பா பட்டம் என்பது தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி விவசாய நிலங்களில், நெல் விதைப்பு அல்லது நடவு தொடங்கும் காலத்தையும் மற்றும் சாகுபடி கால அளவையும் குறிக்கும் நெல் பருவமாகும். ஜுலை-ஆகஸ்ட் (தமிழ்-ஆடி-ஆவணி) மாதங்களில் துவங்கும் இப்பருவம் டிசம்பர்-ஜனவரி (தமிழ்-மார்கழி-தை) மாதங்களில் முடிவடைகிறது. 130-135 மற்றும் 150 நாட்களுக்கு மேல் கொண்ட இந்த சம்பா பருவம் மத்திய காலம் மற்றும் நீண்டகால நெல் வகைகளை சாகுபடி செய்ய ஏற்ற பருவமாகும்.

சம்பா பருவத்திற்கு பயன்படுத்தப்படும் நெற்பயிர்கள் நன்றாக வளர்ந்து பலன் தருவதற்கு தரமான விதைகள் பயன்படுத்துவது மிகஅவசியமாகும். தரமான விதைகளைப் பயன்படுத்துவதால் 15-20 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும். இதனை கருத்தில் கொண்டு விவசாயிகள் கடந்த பருவமழையால் கிணறு, ஏரிமற்றும் குளங்களில் சேமித்துள்ள நீரை பயன்படுத்தி நெல் சாகுபடி செய்யலாம். சம்பா பருவத்தில் பயிர் செய்ய கூடிய பாரம்பரிய நெல் இரகங்கள் மாப்பிள்ளை சம்பா (155-160 நாட்கள்), தூயமல்லி (135-140 நாட்கள்) தங்க சம்பா (160-165 நாட்கள்), கருப்பு கவுணி (145-160 நாட்கள்), சீரக சம்பா (125-130 நாட்கள்), குதிரைவால் சம்பா (140-150 நாட்கள்), கலியன் சம்பா (125-130 நாட்கள்) மற்றும் கிச்சலி சம்பா (140 நாட்கள்) ஆகும். சம்பா பருவத்திற்கு ஏற்ற இதர நெல் இரகங்கள் ASD-19, ADT-38, ADT-39, ADT(R)46, ADT-50, ADT-51, ADT-52, CO-43, CO(R)50, CO-52, White Ponni, CR 1009, CR 1009 Sub 1, TRY-1, TRY-3, BPT-5204, TKM-13 ஆகும்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூரை தலைமை யிடமாகக் கொண்டு விதைச் சான்று மற்றும் உயிர்மசான்றளிப்பு துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்விதை பரிசோதனை நிலையத்தில் விதைச்சான்று துறையிடமிருந்து பெறப்படும் சான்று விதைமாதிரிகள், விதை ஆய்வாளர்களிடம் இருந்து பெறப்படும் ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் விவசாயிகள், விற்பனையாளர்கள், விதை உற்பத்தியாளர்கள் ஆகியவர் களிடமிருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகிறது. விதையின் தரத்தை அறிந்திட முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற இரக கலப்பு ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

தரமான நெல் விதை என்பது குறைந்தபட்சம் 80சதவீதம் முளைப்புதிறனும், குறைந்தபட்சம் 98 சதவீதம் புறந் தூய்மையும், அதிகபட்சமாக 13 சதவீதம் ஈரப்பதமும், அதிக பட்சமாக 0.2 சதவீதம் பிற இரகக் கலவனும் இருத்தல் அவசியம். விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80/-பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச் சீட்டுகளுடன், நெல் விதைகள் 400 கிராம் அனுப்பி விதைகளை பரிசோதனை செய்து கொள்ளலாம்.ஆய்வறிக்கை முடிவுகள் விவசாயிகளின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை விதைப்பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர்கள் ரெ.ஆஷலதா மற்றும் ரா.அம்பிகா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# நெல் நடவுப் பணியில் வேளாண் மாணவர்கள்

திருவாரூர், அக்.13

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், மூங்கில்குடி கிராமத்தில், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தில் (RAWE) இறுதியாண்டு வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாய வயலில் நெல் நடவுப் பணி மேற்கொண்டனர்.

இந்நிகழ்வின் மூலம், நெல் சாகுபடி முறைகள் குறித்த நடைமுறைப் பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. நெல் நடவுக்குத் தேவையான வயல் தயாரிப்பு, நாற்றங்கால் பரா மரிப்பு, நாற்றுகளைப் பறித்தல் 0 மற்றும் வயலில்

நடவு செய்தல் உள்ளிட்ட பல்வேறு செயல்முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், விவசாயிகளின் அனுபவங்கள், பாரம்பரிய வேளாண் நடைமுறைகள் மற்றும் நவீன சாகுபடி முறைகள் குறித்த தகவல்கள் மாணவர்கள் பெறப்பட்டன. வகுப்பறையில் கற்ற வேளாண் தொழில்நுட்பங்களை வயல் வெளியில் நடைமுறைப்படுத்துவதற்கும், விவசாயிகளின் சாகுபடி அனுபவங்களை நேரடியாக அறிந்து கொள்வதற்கும் இந்நிகழ்வின் மூலம் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

## கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து தகவல்களை கேட்டறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டிணம், அக்.13

நாகப்பட்டிணம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 4 ஆம் ஆண்டு இளநிலை வேளாண் மாணவர்கள், திருவாரூர் மாவட்டம், கோட்டூர் வட்டாரத்தில் கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் கிராம நிர்வாக அலுவலரை (VAO) நேரில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் போது கிராமத்தின் மக்கள் தொகை கணக்கெடுப்பு, விவசாய நிலங்களின் பரப்பளவு, முக்கிய பயிர்கள், பாசன வசதிகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த விவரங்களை மாணவர்கள் கேட்டறிந்தனர்.

மேலும், விவசாயிகளின் வாழ்வாதார நிலை மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் கிராம நிர்வாக அலுவலர் (VAO) மூலம் மாணவர்களுக்கு கிராம நடைமுறை அறிவை வேளாண் கல்லூரி மாணவர்கள் பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மக்காசோளத்தில் படைப்புழு தாக்குதலை தடுப்பது எப்படி?



சமீபத்திய மழையை பயன்படுத்தி தென்மாவட்டங்களில் கரிசல் நிலங்களில் மானாவாரியாகவும் இறவையாகவும் மக்காசோளம் சாகுபடி செய்யப்பட்ட நிலையில் தற்போது படைப்புழு (FALL ARMY WORM) தாக்குதல் தென்படுவதாக தெரிகிறது. அந்த புழுவை எப்படி ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது என்பது பற்றி விரிவாக பார்ப்போம்.

**முதலில் படைப்புழு பற்றி தெரிந்து கொள்ளுவோம்!**

இது நம்முடைய நாட்டு புழு அல்ல.வெளிநாட்டு வரவு. அமெரிக்காவை தாயகமாக கொண்டது. 2018யில் நமது நாட்டில் மக்காசோள பயிரில் தென்பட்டு தற்போது பரவலாக எல்லா இடங்களில் காணப்படுகிறது. இதனுடைய அறிவியல் பெயர் (SPODOPTERA FRUGICIDA). தாய் அந்துப்பூச்சி மக்காசோள பயிரின் இலையின் அடிப்பகுதியில் 100-200 கொண்ட முட்டை குவியலை இடுகிறது. இதிலிருந்து வெளி வரும் புழுக்கள், பச்சை முதல் இளஞ்சிவப்பு நிறம் வரை காணப்படும். இந்த புழுக்கள் தான் மக்காசோள குருத்து களையும் இளம் தழைகளை கடித்து சாப்பிடும். முதிர்ந்த புழுக்களின் தலைமேல் க்ஷ ‘ வடிவ குறியுடன் பின்பகுதியில் நான்கு கரும்புள்ளிகள் இருக்கும்.

**ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது எப்படி?**

மக்காசோளம் விதைப்புக்கு முன்னதாக கோடை உழவு போட வேண்டும். இதனால் படைப்புழுவின் கூட்டுபுழுக்கள் மண்ணில் இருந்து வெளியேற்றிட கோடை உழவு பயன்படு கிறது. இதனால் கூட்டுப்புழுக்கள் சூரிய வெப்பத்தால், அழிக்கப் படுவதுடன், பறவைகளுக்கு இரையாகும். கடைசி உழவில்

ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு (NEEM CAKE) இடவேண்டும். படைப்புழு தாக்குதலை கட்டுபடுத்த சூரிய காந்தி, எள், கம்பு, சோளம், தட்டைபயறு, கேந்தி பூ போன்றவற்றை வரப்பு பயிராகவும், உளுந்து, பாசிபயறு போன்றவற்றை ஊடு பயிராகவும் சாகுபடி செய்ய வேண்டும்,

**விதை நேர்த்தி**

மக்காசோள விதைகளுக்கு (ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் பேவரியா பேசியானா என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். 15-20வது நாளில் மக்காசோளத்தில் படைப்புழு தாக்குதல் தென்பட்டால் ஒரு ஏக்கருக்கு அசாடி ராக்டின் (1000 பிபிஎம்) 200 லிட்டர் தண்ணிரில் கலந்து குருத்து பகுதியில் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். 25-35வது நாட்களில் மெட்டாரைசியம் அனிசோபிலை உயிர் பூஞ்சானத்தை ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் தெளிக்க வேண்டும். அல்லது எமாக்டின் பென்சோயோட் 4 கிராம்/10 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்க வேண்டும். 60-65வது நாளில் பயிரில் படைப்புழு காணப்பட்டால், ஸ்பைனடோராம் 11.7 எஸ்.சி என்ற மருந்தை ஏக்கருக்கு 100 மிலி என்றளவில் தெளிக்க வேண்டும்.

**இனக்கவர்ச்சி பொறி & பறவை தாங்கி**

ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திட ஏக்கருக்கு 5 எண்ணம் இனக்கவர்ச்சி பொறி (PHEROMONES TRAPS) மற்றும் பறவை தாங்கி 5 எண்ணம் வைத்து இயற்கை முறையில் படைப்புழுவை கட்டுப்படுத்திட வேண்டும்.

**முக்கியமாக கவனிக்க வேண்டியவை**

1) அடிக்கடி மழை பெய்தால் படைப்புழு தாக்குதல் குறையும்.

2) பூச்சி மருந்துகளை தெளிக்கும் போது பயிரின் குருத்து பகுதியில் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும்.

3) ஒரே மருந்தை திருப்பி திருப்பி தெளிக்க கூடாது.

4) அதிக படியான தழைசத்தை பயிருக்கு இடக்கூடாது.

5) மக்காசோள பயிரில் களைகளை அப்புறப்படுத்த வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# சென்னிமலை வட்டாரத்தில் விஞ்ஞானிகளுடன் விவசாயிகள் கலந்துரையாடல் நிகழ்வு




ஈரோடு, அக்.13

விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை தெளிவு பெற வேளாண்மை மற்றும் சகோதரத்துறை தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி 12.10.26 அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலை வட்டார ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மைய அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் சென்னிமலை, பெருந்துறை, ஈரோடு, கொடுமுடி மற்றும் மொடக்குறிச்சி வட்டாரங்களைச் சார்ந்த முன்னோடி விவசாயிகள் மற்றும் உயிரம வேளாண்மை செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் சந்தேகங்களை தெளிவுப்படுத்தி கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சி வேளாண்மை இணை இயக்குநர் இரா.சிவக் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) பு.சு.அருள்வடிவு, வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) சி.சசிகலா ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு அரசு திட்டங்களை எடுத்துக் கூறி முன்னிலை வகுத்தனர்.

விவசாயிகள் கேட்கும் கேள்விகள் / சந்தேகங்களுக்கு வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் சரவணகுமார், பச்சியப்பன், ஜான் பிரபாகரன் ஆகியோர் தக்க விளக்கங்களை அளித்தனர்.

இந்நிகழ்வில் ஈரோடு மாவட்டத்தில் சாகுபடி செய்ய ஏதுவான தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டன. உயிர்ம வேளாண்மை தொடர்பாக கேட்கப்பட்ட சந்தேகங்கள், பயிர் சாகுபடி செலவினை குறைத்து மகசூலினை அதிகரிக்க உரிய தொழில்நுட்பமும் நீர் மேலாண்மை, பூச்சி மேலாண்மை, நோய் மேலாண்மை மற்றும் உர மேலாண்மை குறித்த கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கப் பட்டது.

இதில் தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.சசிகலா, ந.து.பிருந்தா, வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) ஆகியோர் தங்களது துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைக் குறித்தும் தெளிவுப்படுத்தினர். உயிர்ம வேளாண்மை செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டு சக விவசாயிகளுக்கு உயிர்ம வேளாண்மை குறித்த பயன்கள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் நிறைவாக வருகை புரிந்த அனைவருக்கும் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் மு.த.ராம் ஜிவன்யா நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அட்மா பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# எல் நினோவும் உணவுப் பொருட்களின் விலை உயர்வும் : நுகர்வோருக்கு அதிகரிக்கும் கவலை

## மழைப் பற்றாக்குறையிலிருந்து குடும்பச் செலவு உயர்வு வரை

தமிழகத்தில் அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு குடும்பங்களின் செலவினத்தில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. எல் நினோவுடன் தொடர்புடைய வானிலை மாற்றங்கள் வேளாண் உற்பத்தியைப் பாதிக்கும் அபாயத்தை அதிகரிக்கலாம். இருப்பினும், சந்தை வரத்து, இருப்பு, பருவகாலத் தேவை மற்றும் போக்குவரத்துச் செலவுகளும் விலையை நிர்ணயிக்கின்றன.

## மழை மற்றும் வெப்பநிலை நிலவரம்

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் (IMD) தகவலின்படி, 2026 ஜுன்-செப்டம்பர் தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் இந்தியாவின் மொத்த மழைப்பொழிவு நீண்டகால சராசரியை விட 12.6% குறைவாக, 759.4 மி.மீ. பதிவானது. நீண்டகால சராசரி 868.6 மி.மீ. எனக் குறிப்பிடப்பட்டது. தமிழ்நாட்டில் இதே காலத்தில் மழைப்பற்றாக்குறை 13% எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும், 2018-2025 காலத்தின் சராசரியுடன் ஒப்பிடுகையில், தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் தமிழகத்தின் சராசரி வெப்பநிலை 1.21°C அதிகமாக இருந்ததாக அறிக்கை குறிப்பிட்டது. இத்தகைய சூழல் பயிர்களின் நீர்த் தேவையை அதிகரித்து, மண்ணின் ஈரப்பதக் குறைபாட்டை தீவிரப்படுத்தலாம்; ஆனால் பாதிப்பு பயிர் மற்றும் மாவட்டத்துக்கு ஏற்ப மாறுபடும்.

## சந்தையில் விலை உயர்வு

2026 அக்டோபர் 7 அன்று வெளியான DT Next செய்தியின் படி, சென்னையின் மொத்த விற்பனைச் சந்தையில் துவரம் பருப்பு கிலோ ரூ.126-லிருந்து ரூ.143-ஆக உயர்ந்தது (சுமார் 13.5%). கடலைப் பருப்பு ரூ.80-லிருந்து ரூ.90-ஆக உயர்ந்தது (12.5%). குண்டு மிளகாய் விலை கிலோ ரூ.330-லிருந்து ரூ.420-ஆக உயர்ந்ததாகவும் செய்தி குறிப்பிட்டது (27.3%). மழைப்பற்றாக்குறை, முக்கிய உற்பத்தி மாநிலங்களில் குறைந்த இருப்பு மற்றும் பண்டிகைக் காலத் தேவை ஆகியவை விலை அழுத்தத்திற்கான காரணங்களாக வணிகர்கள் தெரிவித்தனர்.

இவை சென்னையின் குறிப்பிட்ட சந்தைத் தகவல்கள் ; தமிழகம் முழுவதற்குமான சராசரி விலை மாற்றமாகக் கருதக் கூடாது.

**தமிழகத்திற்கு வடகிழக்குப் பருவமழையின் முக்கியத்துவம்**

அக்டோபர் – டிசம்பர் மாதங்களில் கிடைக்கும் வடகிழக்குப் பருவமழை தமிழகத்தின் சம்பா நெல் சாகுபடி, நீர்த்தேக்கங்கள் நிரம்புதல் மற்றும் நிலத்தடி நீர் புதுப்பித்தல் ஆகியவற்றுக்கு முக்கியமானது. போதுமான, சீரான மழை பயிர் வளர்ச்சிக்கு உதவலாம். மழை குறைந்தாலோ இடைவெளி நீண்டாலோ பாசனத் தேவை, நீர் அழுத்தம் மற்றும் உற்பத்தி அபாயங்கள் அதிகரிக்கலாம்.

இதன் உண்மையான தாக்கத்தை மதிப்பிட மாவட்ட வாரியான மழைப்பதிவுகள், பயிர் விளைச்சல் மற்றும் சந்தை வரத்து தரவுகள் தேவை.

**தீர்வுக்கான நடவடிக்கைகள்**

மாவட்ட அளவில் மழை மற்றும் பயிர் நிலவரத்தைக் கண்காணித்தல், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் வானிலை ஆலோசனைகள் வழங்குதல், நீர் சிக்கனப் பாசன முறைகளை ஊக்குவித்தல், சேமிப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், மொத்த மற்றும் சில்லறை விலைகளைத் தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவை அவசியம். தேவையான இடங்களில் அரசு கையிருப்பு மற்றும் பொது விநியோக முறைகளின் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கலாம்.



## முடிவுரை

எல் நினோ உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கு பங்களிக்கக்கூடிய ஒரு வானிலை அபாயம் மட்டுமே; அது ஒரே காரணம் அல்ல. நம்பகமான வானிலைத் தகவல், பயிர் உற்பத்தித் தரவுகள் மற்றும் சந்தை விலைப் பதிவுகளை இணைத்து ஆய்வு செய்வதன் மூலம் தமிழக விவசாயிகளின் உற்பத்தியையும் நுகர்வோரின் வாங்கும் திறனையும் பாதுகாக்க முடியும்.

குறிப்பு : வெளியீட்டிற்கு முன், குறிப்பிடப்பட்ட மழை மற்றும் வெப்பநிலைத் தரவுகளையும் சந்தை விலை ஒப்பீட்டுக் காலத்தையும் அதிகாரப்பூர்வ ஆதாரங்களில் இறுதியாகச் சரிபார்க்கவும். சென்னையின் விலைத் தரவுகள் மாநிலம் முழுவதற்குமான தரவுகளாகக் கருதப்படவில்லை.



தகவல் : *Dr B.Venugopal, Assistant Professor (Grade 1), Finance and Accounting and Barani Kumar P.S., PG Scholar, PGDM-Agribusiness and Plantation Management, Indian Institute of Plantation Management (An Autonomous Organization of the Ministry of Commerce & Industry – Govt. of India), Bengaluru.*





# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்





தஞ்சாவூர், அக்.13

தஞ்சாவூர் மாவட்டம், திருமங்கலக்கோட்டை மற்றும் பருத்திக் கோட்டை கிராமங்களில் இப்கோ மற்றும் வேளாண்மைத் துறை இணைந்து விவசாயிகள் விழிப் புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர். இந்நிகழ்ச்சிகள் காந்திகிராம் கிராமப்புறப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் டாக்டர் உதயகுமார் மற்றும் இப்கோ கள அலுவலர் மாரியப்பன் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளில், இப்கோ நானோ டி.ஏ.பி., நானோ யூரியா, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகா மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் மற்றும் நன்மைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், நானோ உரங்களை விதை நேர்த்தி, நாற்றுகளின் வேர்களை நனைத்தல் மற்றும் இலைவழித் தெளிப்பு ஆகிய முறைகளில் பயன்படுத்துவது குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து, நெல் சாகுபடியில் சமச்சீர் உரப்பயன்பாடு, மண்வளப் பாதுகாப்பின் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த வேளாண்மை முறைகள் மற்றும் விவசாயிகளுக்கான அரசுத் திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இப்கோவின் சங்கட் ஹரன் பீமா யோஜனா திட்டம் மற்றும் அதன் நன்மைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிகள் மூலம் விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், சமச்சீர் உரப் பயன்பாடு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிலையான வேளாண்மை முறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# குடவாசலில் வேளாண் மாணவர்களின் களப்பயணம் : உரங்கள் மற்றும் விதை ரகங்கள் குறித்து நேரடி பயிற்சி

திருவாரூர், அக்.13

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டார வேளாண் மாணவர்கள் குழு, வேளாண் உள்ளீட்டு கடையான AJK Dharani Traders–ஐ பார்வையிட்டு களப்பயணம் மேற்கொண்டனர். இந்தப் பயணத்தின் மூலம் மாணவர்கள் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய உரங்கள், அவற்றின் ஊட்டச்சத்து உள்ளடக்கம், உரங்களின் சேமிப்பு மற்றும் கையாளும் முறைகள், மேலும் விவசாயிகளுக்கு உரங்கள் எவ்வாறு பரிந்துரைக்கப்படுகின்றன என்பது குறித்து நேரடியாக அறிந்து கொண்டனர்.

களப்பயணத்தின் போது, கடை நிர்வாகத்தினர் மாணவர்களுக்கு உரங்களின் வகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடு குறித்து விளக்கினர். குறிப்பாக, உரப் பைகளின் பாதுகாப்பான சேமிப்பு, ஈரப்பதத்திலிருந்து பாதுகாப்பு, முறையான கையாளுதல் மற்றும் விவசாயிகளின் தேவைக்கேற்ப உரங்களைத் தேர்வு செய்து வழங்கும் நடைமுறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்தக் களப்பயணம், வகுப்பறையில் கற்ற வேளாண் உள்ளீடுகள் தொடர்பான அறிவை நடைமுறை அனுபவத்துடன் இணைக்க மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. விவசாயிகளுக்கு தரமான உரங்கள் மற்றும் விதைகளை சரியான முறையில் தேர்வு செய்து பரிந்துரைப்பதில் வேளாண் அறிவின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் புரிந்து கொண்டனர்.

# தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் மாணவர்கள் களப்பயணம்!

திருவாரூர், அக்.13

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டதில் (யூபுநிசி) ஒரு பகுதியாக, கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின் ஜெயசூர்யா, பெய்ஸல் ஃப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் நன்னிலத்தில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தை பார்வையிட்டனர்.

இக்களப்பயணத்தின் போது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல்பாடுகள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன்கள், வேளாண் கடன் வழங்கும் நடைமுறைகள், கடன் திருப்பிச் செலுத்தும் முறைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், விவசாயிகளின் பொருளா தார முன்னேற்றத்தில் கூட்டுறவு கடன் சங்கங்களின் பங்கு, விவசாயக் கடன்களைப் பெறு வதற்கான தகுதிகள், சேமிப்புத் திட்டங்கள் மற்றும் அரசின் வேளாண் நலத்திட்டங்களைச் செயல் படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்களிப்பு குறித்தும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இக்களப்பயணத்தின் மூலம், கிராமப்புற விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த நடைமுறை அறிவு வேளாண் மாணவர்களுக்குக் கிடைத்தது.

# பாலாறு வேளாண்மைக் கல்லூரி ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட துவக்கவிழா



திருப்பத்தூர், அக்.13

பாலாறு வேளாண்மைக் கல்லூரியில் பயிலும் வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்களின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் துவக்கவிழா, திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள கோனேரிக்குப்பம் கிராமத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முனைவர் தாமோதரன் கலந்துக் கொண்டு விழாவைச் சிறப்பித்தார். மேலும் விவசாயிகளுக்கு அக்ரி ஸ்டாக் என்னும் விவசாயிகள் தனித்துவ அடையாள எண் மூலம் கிடைக்கப் பெறும் நன்மைகள் பற்றி விளக்கினார். பின்னர் வேளாண் அலுவலர் அனுப்பிரியா, வேளாண்துறை திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். அதன்பின் பேசிய பாலாறு வேளாண் கல்லூரியின் வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியை முனைவர் பு. வெண்ணிலா மேரி, ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தைப் பற்றியும் அதன் பயன்கள் குறித்தும் விளக்கினார். தொடர்ந்து தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கு.விக்னேஷ், விவசாயத்தின் மகத்துவம் பற்றியும், விவசாயத்தில் புதுப்புது தொழில்நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இவ்விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக்கொண்டு பயன் பெற்றனர்.

# வெள்ளாட்டு குட்டிகளில் போலியோ என்செபலோ மலேசியா எனும் நரம்பு தளர்ச்சி மூளைக்காய்ச்சல்

போலியோ என்செபலோ மலேசியா எனும் நரம்பு தளர்ச்சி நோயானது விரைவில் தீவிரமடையும் ஒரு வகை மூளைக் காய்ச்சல் ஆகும். வெள்ளாட்டு குட்டி தலையை திருகி அல்லது திருப்பி வைத்திருந்தால் மூளையானது வீக்கம் பெற்றுள்ளது என்று அறியலாம். கழுத்துப்பகுதி தசைகள் இருக்கம் பெற்றிருக் கும். ஆதலால் தலையானது ஒரு பக்கமாக திருப்பி அல்லது



மேல் நோக்கி அல்லது முழவதும் தலையை வானம் பார்த்தார் போல் துஜுக்கி இருக்கும். இது மத்திய நரம்பு மண்டலம் பாதிக்கப்படுவதால் ஏற்படுகிறது. மூளைக்கு தேவையான ஆற்றல் கிடைக்கப் பெறாததால் இவ்வகையான குறைபாடு ஏற்பட்டு மூலையில் நீர் கோத்து, வீக்கம் ஏற்பட்டு மூளை தசைகள் செயலிழக்க நேரிடுகிறது.

**ஏன் இளம் வயது வெள்ளாட்டு குட்டிகள் பாதிப்பிற்குள்ளா கின்றன?**

வளர்ந்த ஆடுகளுக்கு தேவையான வைட்டமின் பி 1 அவற்றின் அசையூண் வயிற்றில் உள்ள பலதரப்பட்ட நுண்ணுயிரிகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் குட்டிகளில் அவை இரண்டு அல்லது மூன்று மாத வயது வந்தப்பின் மட்டுமே அசையூண் வயிறு உற்பத்தி ஆகும். ஆக தேவையான வைட்டமின் பி 1 அளவு மூளைக்கு சென்றடையாததால் இவ்வகை குறைபாடு ஏற்படுகிறது.

குட்டிகளின் வயிற்றில் ஏற்படும் மாற்றத்தால் வைட்டமின் பி 1 உற்பத்தி விரைவாக குறைந்துவிடுகிறது. ஆதலால் மூளை தசைகள் செயலிழக்க ஆரம்பிக்கின்றன. எனவே மூளையானது குளுக்கோஸ் சத்தை உபயோகிக்காமல் செயலிழந்துவிடுவதால் இவ்வகை நரம்பு தளர்ச்சி ஏற்படுகிறது. அசையூண் வயிறு உற்பத்தி ஆகும் முன் குட்டிகளுக்கு மாவு சத்துமிகுந்த உணவுகளை அளிப்பதால் வயிற்றின் அமில காரத் தன்மை மாறி வைட்டமின் பி 1 உற்பத்தி குறைவதால் ஏற்படுகிறது.

இரத்தக் கழிச்சலை ஏற்படுத்தும் ஓரணு ஒட்டுண்ணி தாக்கத்தை குணப்படுத்த கொடுக்கும் ஆம்ப்ரோலியம் மருந்தின் அளவு அதிகமானால் அல்லது சரியான அளவு கொடுக்காததால் வைட்டமின் பி 1 உற்பத்தியும் உட்கிறகித்தலும் குறைந்து விடுகிறது. வைட்டமின் பி 1 உற்பத்தி அதிகம் இருந்தாலும் சல்பர் அளவு அதிகமாக தரமற்ற தண்ணீரில் இருந்தாலும், களை தழைகளை உண்பதாலும் சல்பர் அளவு அதிகரித்து வைட்டமின் பி 1 அளவு குறைந்து விடுகிறது. இதனால் தலையானது ஒரு பக்கமாக திருப்பி அல்லது மேல் நோக்கி அல்லது முழுவதும் தலையை வானம் பார்த்தார் போல் தூக்கி இருக்கும்.

**மூளைக்காய்ச்சலின் வீரியம் மற்றும் அறிகுறிகள்**

தொடக்க நிலையில் ஆட்டுக்குட்டிகள் படபடப்புடனும் மற்ற குட்டிகளிடமிருந்து பிரிந்தும் இருக்கும். காது மடல்கள் முறுக்கியும், வெறித்து பார்த்துக்கொண்டும் தீடீரென பார்வை மங்கும், நடையில் தல்லாட்டமும் கொண்டு இருக்கும்.

சற்று முற்றிய நிலையில் கழுத்து தசைகள் இறுகி தலையை வளைத்து திருகி மேல்நோக்கி பார்த்தார் போல ஆட்டுக்குட்டிகள் இருக்கும். பற்களை நரநரவென கடித்தும், கண்களை மேலும் கீழும் அல்லது பக்கவாட்டில் உருட்டிக் கொண்டே இருக்கும்.

அறிகுறி முற்றிய நிலையில் திடீரென இறந்துவிடும். இறப்பதற்கு முன் கால்கள் விரைத்துக் கொண்டு வலிப்பு ஏற்படும், கோமா நிலைக்கு தள்ளப்பட்டு இறந்துவிடும்.

**சிகிச்சை முறைகள்**

கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி வைட்டமின் பி 1 மருந்து சிரை வழியாகவோ, தசை வழியாகவே அல்லது வாய் வழியாகவோ கொடுக்கலாம்.

பாதிக்கப்பட்ட குட்டிகளை தனிமைபடுத்தி இருட்டாக சுத்தமான இடத்தில் படுக்கை மெதுமெதுவென இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதிகபடியான வெளிச்சம், சத்தம் மீண்டும் வலிப்பு ஏற்படுத்த வாய்ப்பு உண்டு.

குட்டிகளை உட்கார வைத்து பழக்க வேண்டும். படுத்தே கிடந்தால் தசைகள் இரணமாகும் அல்லது வயிற்று தண்ணீர் நுரையீரலில் சேர வாய்ப்புண்டு.

வைட்டமின் பி 1 குறைபாட்டை தடுக்க இளங்குட்டிகளை பசும்புற்களை மேய்த்தல் ஆகாது. உலர்த் தீவனத்தையும் அதிகம் கொடுக்க கூடாது.

தீவனத்தில் மாற்றம் செய்ய நினைத்தால் படிபடியாக பத்து முதல் பதிநான்கு நாட்கள் காலத்தில் செய்யவேண்டும். இந்த கால இடைவெளியில் அசையூண் வயிற்றுக்கு தேவையான நன்மை செய்யும் உயிரிகள் உற்பத்தி ஆகம்.



வளரும் குட்டிகளுக்கு சுத்தமான, உலர்ந்த தண்டு நீண்ட புற்களை கொடுக்கலாம். இதனால் குட்டிகள் அசைபோடும் போது அதிகபடியான உமிழ்நீர் சுரந்து அசையூண் வயிற்று நீரின் அமிலகாரத்தன்மையை சமநிலைக்கு பராமரிக்கும்.

தகவல் : *முனைவர் மா.வெங்கடேசன், ச.அனுவைஷ்ணவி, ப.அர்ச்சனா, அ.அபிநயஸ்ரீ மற்றும் முனைவர் சு.சிவராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.*

# Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**